விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 06 ( 19 - 03 - 1992 ) வியாழக்கிழமை ஓசை: 30

## முதியோர் தொகை 2001 இல் 10 இலட்சம்

இலங்கையில் முதியவர்களின் எண்ணிக்கை பத்து இலட்சமாக அதிகரிக்கும் என புனர்வாழ்வு, புனர்நிர்மாணசமூகநல அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது மக்களின் ஆயுட்காலம் அதிகரித்துவருவதால் 65வயதுக்குமேற்பட்டோரின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. 1946ஆம் ஆண்டில் 65வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து முப்பதி மூவாயிரம் ஆகும். இது மொத்த சனத்தொகையில் 3 5 சதவீதமாகும். இது 1986 இல் எட்டுஇலட்சமாக அதிகரித்தது 2001 ஆம் ஆண்டில் 65 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையின் 62சதவீதமாக இருக்கும் ஆனால் வறுமை, இருப்பிடவசதி போன்ற பொருளாதார காரணங்களினால் முதியவர்களை (4ஆம் பக்கம் பார்க்க)

# அகோர குண்டு வீச்சின் மத்தியில் புலிகள் - ராணுவம் உக்கிரமோதல்

## மணலாற்றில் இரண்டாவது நாளாக கடும் சண்டை தொடர்கிறது

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் இரண்டாவது நாளாகவும உக்கிர மோதல் இடம் பெற்று வருகின்றது. விமானப் படையின் அகோரக் குண்டு வீச்சின் மத்தியிலும், கடற்படையின் கண் மூடித்தனமான பீரங்கித் தாக்குதலின் இடையிலும் இச் சண்டை தொடர்ந்தும் நடை பெற்று வருகிறது.

மணலாறு மாவட்டத்தில் 'கயபார' இராணுவ நடவடிக்கையின் ஆறாவது கட்டம் நடைபெறுவதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள்தெரிவித்தன. சீனத் தயாரிப்பு டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகளுடன் மூவாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் இந்நடவடிக்கைகளில்ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்தஇராணுவ நடவடிக்கைக்கு சிறிலங்கா விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் கடற்படைப் பீரங்கிப் படகுகளும் உதவியளித்து வருகின்றன.

நேற்று முன்தினம் ஆரம்பித்த குண்டுவீச்சும், பீரங்கித் தாக்குதலும் இராணுவ [4 ஆம் பக்கம் பார்க்க]

## 30 படை பலி: 80 பேர் காயம் 6 கவச வாகனங்கள் அழிப்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று ...

மேலும், இத்தாக்குதலின் போது ஆறு இராணுவ கவச வாகனங்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

இதில் இரண்டு கவசவாகனங்களைப் புலிகள் கைப்பற்றி அழித்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கஉபுதிகள் ...

## ஊழியர்களுக்கு சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான தை, மாசி ஆகிய மாதங்களுக்கான ஊதியம் வழங்கப்பட்டுவருகிறது பத்து தினங்களிற்குள் நாவலர்வீதியில் உள்ள காரியாலயத்தில் இவ் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளும்படி ஊழியர்கள் கேட்கப்படுகின்றனர். (க)

## எறிகணை வீச்சிற்கு நித்திரையிலிருந்த மூவர் படுகாயம்

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள்வல்வெட்டித்துறைப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததினால் படுக்கையில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு (17-03-92) 10.00மணியளவில் பலாலியில் இருந்து சில நிமிட நேரம் தொடர்ச்சியாக, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

எறிகணையொன்று வல்வெட்டித்துறை வேவில் என்னுமிடத்தில் உள்ள வீடு ஒன்றின் மீது வந்து விழுந்து வெடித்தபோது அவ் வீட்டில் படுக்கையிலிருந்த நாகலிங்கம் சதாசிவம்- வயது 42 (தந்தை) சதாசிவம் ஜீவராசா- வயது10 (மகன்) சதாசிவம் பிரபாகரன் வயது 05 (மகன்) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (36)

## வட-கிழக்கில் சகஜ நிலை; அவுஸ். தூதுவர் வற்புறுத்து

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் காணப்படும் நிலைமைகுறித்துஅவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகர் ஹோரலேட் பிரான்ஸிஸ் டெயான்னம் கவலை தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா வர்த்தக அமைச்சர் ஏ.ஆர். மன்சூரை அண்மையில் சந்தித்து உரையாடிய போதே அவுஸ்ரேலிய தூதுவர் இதனைத் தெரிவித்தார். இப்பகுதிகளில் வழமைநிலை ஏற்பட்டு மக்கள் அமைதியாக வாழக்கூடிய நிலை உருவாக வேண்டும் என்பதே அவுஸ்ரேலிய மக்களின் விருபபம் எனவும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை குறித்து அவுஸ்ரேலிய அரசாங்கம் கொண்டிருக்கும் அக்கறையை அவர் வெளிப்படுத்தினார்.

அத்துடன் அவுஸ்ரேலியா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது தொடர்பாக தனது பங்களிப்பினை வழங்க தயாராக இருப்பதாக அண்மையில் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முத்தமிழ்விழா மலர் ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் பல பாகங்களிலும் நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவை யொட்டி (1992) வெளியிடப்படவிருக்கும் முத்தமிழ் விழா மலருக்கான ஆக்கங்களும் கட்டுரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. அனுப்பும் கட்டுரைகள் தமிழீழத் தேசிய பாரம்பரியங்களை அடியொற்றியனவாக அமைதல் வேண்டும்.

ஈழத்து கலை, இலக்கிய வரலாற்றில் சிறுகதை, நாவல் உரைநடை மற்றும் கவிதை பற்றிய தனித்தனி ஆக்கங்கள் தமிழீழத்தின் சமூகவியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள், தமிழீழத்தின் இசைப் பாரம்பரியம், தமிழீழத்தின் அவைக்காற்றுக் கலைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், கிராமியக் கலைகள்- தமிழீழத்தின் வாழ்க்கையோடு இணைந்துள்ளமை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள். தமிழீழத்தின் ...

## வடமராட்சி மீது எறிகணைத் தாக்கு

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றிரவு ஏவப்பட்ட எறிகணைகள் வடமராட்சிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதேவேளை வடமராட்சிக் கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள கடற்படைப் பீரங்கிப் படகுகளும் நள்ளிரவு வேளையில் குடிமனைகளை நோக்கி பீரங்கிக் குண்டுகளை வீசியுள்ளன பலாலி இராணுவ முகாமிலிருந்து 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

# 30 படை பலி: 80 பேர் காயம்
# 6 கவச வாகனங்கள் அழிப்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று மூன்தினம் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போது கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை மூப்பதிற்கும் அதிகமாகுமெனச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்தோடு, எண்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், இத்தாக்குதலின் போது ஆறு இராணுவ கவச வாகனங்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

இதில் இரண்டு கவசவாகனங்களைப் புலிகள் கைப்பற்றி அழித்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

பட்ட எறிகணைகள்வல் வெட்டித்துறைப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததினால் படுக்கையில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு (17-03-92) 10.00மணியளவில் பலாலியில் இருந்து சில நிமிட நேரம் தொடர்ச்சியாக, வல் வெட்டித்துறை, தொண்டமானாறு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி எறிகணையொன்று வல வெட்டித்துறை வேவில் என்னுமிடத்தில் உள்ள வீடு ஒன்றின் மீது வந்து விழுந்து வெடித்தபோது அவ் வீட்டில் படுக்கையிலிருந்த நாகலிங்கம் சதாசிவம்- வயது 42 (தந்தை) சதாசிவம் ஜீவராசா- வயது10 (மகன்) சதாசிவம் பிரபாகரன் வயது 05 (மகன்) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (36)

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் பல பாகங்களிலும் நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவை யொட்டி (1992) வெளியிடப்படவிருக்கும் முத்தமிழ் விழா மலருக்கான ஆக்கங்களும் கட்டுரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. அனுப்பும் கட்டுரைகள் தமிழீழத் தேசிய பாரம்பரியங்களை அடியொற்றியனவாக அமைதல் வேண்டும்.

ஈழத்து கலை, இலக்கிய வரலாற்றில் சிறுகதை, நாவல் உரை நடை மற்றும் கவிதை பற்றிய தனித்தனி ஆக்கங்கள் தமிழீழத்தின் சமூகவியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள், தமிழீழத்தின் இசைப் பாரம்பரியம், தமிழீழத்தின் அவைக்காற்றுக் கலைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், கிராமியக் கலைகள்- தமிழீழத்தின் வாழ்க்கையோடு இணைந்துள்ளமை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள். தமிழீழத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றிய கட்டுரைகள். நவீன தொழில்நுப அறிமுகங்களால் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் சிறுகதை, கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

01-0 -92க்கு முன்னர் நேரிலோ கடிதமூலமோ கலை பண்பாட்டுக்கழகத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: மலர்க்குழு, முத்தமிழ் விழாச் செயலகம், விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம், தலைமைச் செயலகம், கோண்டாவில்.

## இராணுவத் தளபதிகள் மணலாறு விரைவு

(கொழும்பு)

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் நேற்று நேற்று மூன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிரிழப்பு, தளபாட இழப்புகள் குறித்து நேரில் அவதானிக்க சிறிலங்கா இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்தின அப்பகுதிக்கு சென்றுள்ளார். இவருடன் வடபகுதி சிறிலங்கா இராணுவ தளபதி டென்சில் கொப்பேகடுவாவும் சென்றுள்ளளார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## இராணுவ நடவடிக்கை குறித்து ஐ. நா. விற்கு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது.

இலங்கையில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உருவாகியிருக்கும் பாதுகாப்புப்பற்றிய நிலைமைகளை விளக்கும் முகமாகவே இந்த அறிக்கை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அதிகாரிகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. அண்மையில் இலங்கை வந்திருந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலய ஜெனிவா தலைமை அலுவலக அதிகாரிகள் குழுவினரால் இங்கு நிலவும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார, வதிவிட நிலைமைகளை அவதானித்தும், கடந்தகாலத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் கொண்டும் சிறிலங்காவின் தற்போதைய நிலைமை தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த அறிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்துக்கும் சம்பந்தப்பட்ட துறைசார்ந்த கிளைத் ஸ்தாபனங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றன. சமர்ப்பிக்கப்படும் இந்த அறிக்கைகளைப் பரிசீலிப்பதன் மூலமும் சிறிலங்கா அரசின் கடந்த கால நடவடிக்கைகளை வைத்துமே ஐக்கியநாடுகள் சபையின் உதவித் திட்டங்கள் எதுவாக இருப்பினும் சிறிலங்காவில் நடைமுறைக்குக் கொண்டு வரபபடும் என்று தெரியவருகிறது. (க)

## இரு வேங்கைகள் களப் பலி

(யாழ்ப்பாணம்)

மணலாறு- கொக்குத்தொடுவாய் சிறிலங்கா இராணுவ முகாம் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடர்ந்தும் இடம்பெற்ற மோதலில்மேலும் இரு வீர வேங்கைகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஆரம்பமான மோதலின்போது பதினொரு வீரவேங்கைகள் வீரச்சாவடைந்தமை தெரிந்ததே. தொடர்ந்தும் நடைபெற்ற மோதலில் இளஞ்சேரலாதன் (கனகசபை சுரேஸ்குமார் மதிய வீதி திருக்கோணமலை) பவளராசன் (ரத்தினம்ஞானப் பிரகாசம் - புனித யூட் வீதி பேசாலை) ஆகிய இரு போராளிகளும் வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## குடிமனைகள் மீது அகோர எறிகணை வீச்சு

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு, நெடுங்கேணி மணலாறு பகுதிகளில் குடிமனைகள் மீது கடும் விமானக் குண்டு வீச்சு நடாத்தப்படுகிறது நேற்று முன்தினம் அங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மேலும் ஆயுதங்கள் மீட்பு

(மணலாறு)

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இராணுவத்திடமிருந்து மேலும் பல ஆயுதங்களையும், இராணுவப் பொருள்களையும் விடுதலைப் புலிகள்கைப்பற்றினர். முதலில் ஆர்.சி.எல்,50கலிபர் துபபாக்கி உட்பட பல நவீன ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றியமை தொடர்பாய் வெளி வந்த செய்திகள் தெரிந்ததே. இவை தவிர கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம்வருமாறு

★ ரி - 81 - 01
★ ரி - 56 பட்மொடல் - 01
★ 50 கலிபர் ரவை - 718
★ ஐ. எம். ரவைகள் - 360
★ புகைக்குண்டு - 04
★ குண்டுதுளைக்காத கவசம்- 01
★ கெல்மட் - 01
★ தண்ணீர் கான் - 01

## ஐ. நா. அதிகாரிகள் முன் தமிழ் அகதிகள் கைது

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் முன்னிலையில் பேசாலை அகதி முகாமில் தங்கியிருந்த பல தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்டத்திலுள்ள பேசாலை அகதி முகாமினுள் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினர் அம்முகாமைச்சோதனையிட்டபின்னர் அங்கிருந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி நினைவுக் கூட்டமும்; உண்ணா விரதமும்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி அவர்களின் நினைவாக அரியாலை சன சமூக நிலையத்தில் இன்று அடையாள உண்ணாவிரதமும் நினைவுக்கூட்டமும் இடம்பெற உள்ளன.

நினைவுக் கூட்டம் பி. ப. 7 மணிக்கு ஆரம்பமாகும். நினைவுக் கூட்டத்தில் கவைரசன், அன்பரசி, பரா, புதுவைஅன்னா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சின்னமணி வில்லிசைக் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இந்த இடம்பெறும்.

## முஸ்லிம் ஊர்காவற்படை பஸ்மீது குண்டுவீச்சு; 3தமிழர் பலி; 15பேர் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் நேற்றுக் காலை தனியார் பஸ் ஒன்றினுள் முஸ்லிம் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது. இதனால் அந்த பஸ்ஸில் பிரயாணம்செய்த மூன்று தமிழர்கள் பலியாகினர். 14 பேர் காயமடைந்தனர். இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த இரு தமிழ்ப்பெண்கள் கடத்தப் பட்டதாகபி.பி.சிதெரிவித்தது

இதேவேளை சாமந்தியாறு என்னும்பகுதியில்'ஒப்பரேசன் ரேசர்' இராணுவ நடவடிக்கையில் சிறிலங்காப படையினர் ஈடுபட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங் தெரிவித்தன.

## மீனவர் மீது கடற்படை தாக்கு

(குருநகர்)

சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதல் குடாக்கடல் பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன் தினம் இரவு குடாக்கடல் பிரதேசத்தில் பிரவேசித்த ஐந்துக்கும் மேற்பட்ட ரோந்துப்படகில் வந்தவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்கள் மீது காட்டுமிராண்டித் தனமாக தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]


வெளிவந்து விட்டது

அ. கௌரிகாந்தன் அவர்களின்

"சமதர்ம உருவாக்கலில் மீளவும் ஓர் பின்னடைவு"

இது தமிழ்த்தாய் பதிப்பகத்தின் ஏழாவது வெளியீடு

[சி/4070] விலை 40/-

## வரி விளம்பரம்

### குழந்தைகள் வைத்தியம்

தீவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலையம் K.K.S வீதி, மனோகரா சந்திக்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவிலுள்ள இருபாலைச் சந்தியிலும் இயங்குகின்றது. (2284)

## புதியநிர்வாககுழு

யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்க புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்தசனிக்கிழமை நடைபெற்ற மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டத்திலேயே இவ்வருடத்துக்கான இத்தெரிவு இடம்பெற்றது.

இதில் எஸ்.என்.இராமச்சந்திரன் தலைவராகவும் கே.ரி சிவராஜா உபதலைவராகவும் செல்வி சந்திரவதனா உபதலைவியாகவும் செயலாளராக எஸ்.மகேந்திரலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## தூவ சிந்தாத்திர தேவாலயம் பூட்டப்பட்டது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு தூவ சிந்தாத்திர கத்தோலிக்க கோயில் பூட்டப்பட்டது. 150 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான கிறிஸ்து சிலை தொடர்பாக ஏற்பட்ட தகராறு காரணமாகவே கோயில் பூட்டப்பட்டுள்ளது.

தூவ கோயிலுக்குப் பொறுப்பாகவிருந்த கட்டளைக் குருவானவர் நீர்கொழும்பு பிட்டிப்பான வீதியிலுள்ள கத்தோலிக்க கோயில் ஒன்றில் தற்சமயம் இருந்து வருகின்றார்.

தூவ கோயில் இயேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகளை (பாஸ்) காண்பிப்பதில் இலங்கையில் பிரசித்தமானது.

## கொள்ளையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி கைது

கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாகோ பகுதியில் உள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர் கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்களோடு தொடர்பு உடையவர் என்பது கண்டறியப்பட்டுள்ளமையால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

## 180ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1 | 19 |
| - | - |
| 8 | 9 |
| - | - |
| 1976 | 1991 |

### வீரவேங்கை தும்பன்

(மகாதேவா - குமணன்)

தாயணைப்பிலே உறங்க வேண்டிய
தளிர்கள் எத்தனை விடுதலை வேள்வித்
தூயதீயிலே தணல்களாயின!
தும்பன் களபுரிதியாகம் நிச்சயம்
தாயகத் தமிழீழம் மீட்டிடும்
சரித்திரம் ஒன்று படைக்கும் சத்தியம்!
தீயணைத்திட மண்ணெய் ஊற்றிடும்
சிங்களவன் விசர் முறிதல் திண்ணமே!

மடத்தடி, சாவகச்சேரி,

பெற்றோர். சகோதரர்கள், உறவினர், நண்பர்கள்.

(2307)

## தேர்தல் ஆணையாளர் ஆவணம் மதிப்பற்றது

(கொழும்பு)

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் பற்றித் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தா டி சில்வா வெளியிட்ட அறிக்கை மதிப்பற்ற ஒரு ஆவணம் என்று வழக்கறிஞர் கே. என். சொக்ஸி உயர் நீதி மன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் வழக்கில் ஜனாதிபதி ஆர், பிரேமதாஸா சார்பில் ஆஜராகி வாதிட்ட சொக்ஸியை எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோவின் வழக்கறிஞர் இடைமறித்த போதே வழக்கறிஞர் சொக்ஸி இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் நடந்து மூன்று வருடங்களுக்குப் பிறகு வெளியிடப்பட்டிருக்கும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களை இப்போது பரிசீலித்துப் பார்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார், இது காலம் கடந்த அறிக்கை என்றார்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
16-12-1976

இறப்பு:
19-3-1991



### வீரவேங்கை அனித்தா

(வை. உதயறஞ்சினி)

பாய்வது புனித கங்கையல்ல
புழு நெளியும் கழிவு நீரே
அணைப்பது நேசக்கரங்களல்ல
நெரித்துக் கொன்றிட வந்த நீசக்கரங்களே!
இலங்கை அன்னியப் படையுடன் எதிராக
வீறு கொண்டு போராடி
நெஞ்சிலே துப்பாக்கிக் குண்டேந்தி
விழுப்புண் பெற்று வீரவரலாறு படைத்தாய்
ஆனால் உன் எண்ணம் ஈடேறவில்லை
எனினும் ஆயிரம் ஆண்டு சென்றாலும்
தமிழீழத்தில் புலிக்கொடி பறந்தே ஆகும்.

உன்பிரிவால் வாடும்
தாய், தந்தை,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்,

கொக்குவில் கிழக்கு,
காளிகோயிலடி. (2311)

## அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

காந்தியத்தின் காவலரின் அநியாயம் அகற்றிவிட
சிந்தினாய் உன் உயிரை உண்ணா நோன்பிருந்து -
தமிழ்ஈழ
சந்ததிக்காய் உயிர்த் தியாகம் செய்த பூபதியே
பிந்தியே வரும் தமிழினமும் பாடமறக்குமோ
உன் துதியை!

தியாகச்சுடர் அன்னை பூபதிக்கு யாழ். மாவட்ட சிமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம் தனது இரண்டாயிரம் அங்கத்தவர்களின் சார்பில் இதய அஞ்சலியைச் செலுத்துகிறது.

இல. 10, ஐயனார் கோவில் வீதி, ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். [2310]

## நினைவு கூருகின்றோம்

### 1992-03-19

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ **பேரின்பம்** (சுந்தரலிங்கம் பேரின்பராசா - தம்பிலுவில், அம்பாறை)

1988ஆம் ஆண்டு அம்பாறை விநாயகபுரம் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ரமணி** (வேலுப்பிள்ளை ஜீவராசா - தம்பிலுவில், அம்பாறை)

இதே சுற்றிவளைப்பின் போது தனது கைக்குண்டை வயிற்றில் வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

**நிதி** (செல்வநாயகம் கருணாநிதி - தம்பிலுவில் அம்பாறை)

1989ஆம் ஆண்டு புலோலி, புற்றளைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். பவான் / ராஜன்** (சரவணானந்தன் பவானந்தன் - பி. எம். வீதி, பருத்தித்துறை)

**றொசான்** (நடேசன் சிவதாசன் - பாலாவத்தை, புலோலி தெற்கு)

இதே சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கரி** (கனகவேற்பிள்ளை கரிக்ரன் - ஞானத்தோட்டம், புலோலி தெற்கு)

குடத்தனைக்கும் மணற்காட்டிற்கும் இடைப்பட்ட வல்வெட்டைப்பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட குடத்தனை, மணற்காடு, துன்னாலைப் பகுதிகளைச் சேர்ந்த 3 - தமிழ் இளைஞர்கள்

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப்பிரிந்த -

**லோறன்ஸ்** (இரத்தினம் இராசலிங்கம் - 37ஆம் கிராமம், பக்கியெல்ல, மட்டக்களப்பு)

1991ஆம் ஆண்டு மன்னார், சிலாபத்துறைப் பகுதியில சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பு யுத்தத்தின்போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய -

**மேஜர் டாம்போ** (காசிப்பிள்ளை தயாபரன் - நாச்சிக்குடாச்சந்தி, மன்னார்)

மற்றும் இதேயுத்தத்தில் வீரச்சாவெய்திய -

**லெப். ஜெரோம்** (மாசில்லாமணி அந்தோனிதாஸ் - 14/04, மத்தியூஸ்வீதி, யாழ்ப்பாணம்)


**நளினி** (புவனேஸ்வரி சின்னத்தம்பி - மீசாலை வடக்கு, கொடிகாமம்.)



2ஆவது லெப். இளஞ் சேரலாதன்



ராமநாதன்



லெப். ஈழவன்



2-ம் லெப் தாஸ்

இளஞ
சேரலாதன்

# எதிரிகள் பாசறை வாசலில் சரித்திரம் எழுதிய எம்மவர்



2-ம்லெப் குரு



இளங்குன்றன்



2-ம் லெப். ஆண்டகை



கூர்வேல்



2-ம் லெப். புவியழகன்

மணலாறு கொக்குத் தொடுவாயில் 17-03-92 அன்று காலை விடுதலைப்புலிகள் சிங்கள இராணுவத்தினரை வழி மடக்கித் தாக்கி அழித்து சாதனை படைத்தனர். இதில் ஆர். சி. எல் ரகப் பீரங்கி உட்பட பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் அள்ளி எடுக்கப் பட்டன. இராணுவ அதிகாரிகள் உட்பட இருபத்தெட்டு இராணுவத்தினர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர். இந்தச் சாதனை படைப்பதில் 13வீரவேங்கைகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர்

விடுதலைப் புலிகள்
தமிழீழ
Liberation Tigers Of TAMIL EELAM



பவள்ராசா
(பவளம்)



2-ம்லெப். இராசன்



குகனேஸ்வரன்
(கசிலன்)



ஞானி

14/04, மத்தியூஸ்வீதி, யாழ்ப்பாணம் )

நளினி (புவனேஸ்வரி சின்னத்தம்பி - மீசாலை வடக்கு, கொடிகாமம்.)

பஸ்ரியன் ( அழகையா தேவராசா - நானாட்டான், மன்னார் )

கனகன் ( கந்தசாமி ரஞ்சித்குமார் நேரியகுளம், வவுனியா )

லெப். குட்டி (இராசநாயகம் ஜஸ்ரின் செல்வகுமார் - 41/121, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் )

லெப். குட்டி ( கணபதி தங்கராசா - ஐயங்கேணி, ஏறாவூர் மட்டக்களப்பு )

லெப். கஜன் ( செபஸ்ரியாம்பிள்ளை விஜயராஜா - வண்ணாங்குளம், அடம்பன், மன்னார் )

ஜெயசக்தி ( யூடிற் ராதிகா குணரத்தினம் - செல்வபுரம், முல்லைத்தீவு )

இளங்கோ ( ச. கண்ணன் - 5ஆம் கட்டை, எருக்கலம்பிட்டி )

ஜின்னா ( கா. கோபாலப்பிள்ளை - களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு )

மேஜர் செட்டி பிரதாப் ( கந்தசாமி செல்வகுமார் - பொன்னாலை சுளிபுரம் )

2ஆம் லெப். நிலாரவி ( சவரி அன்ரன் ஜெயசீலன் - முதலைக்குத்தி, உயிலங்குளம் )

சுந்தர் ( செபமாலை மரியதேவேந்திரன் - அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் )

பூபால் (நா. வடிவேல் - வாழ்க்கைப்பட்டான் கண்டல், மன்னார் )

லெப். வாணி ( சிவராணி செல்லத்துரை - கச்சாய்வீதி, சாவகச்சேரி )

காவேரி ( நிரஞ்சினி வைரமுத்து - அல்வாய் வடக்கு )

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் பேரின்பம் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(சி/4067)

## சிந்தனைக்கு

கடலில் துணிந்து கப்பல்கள் செல்லலாம்
கரையருகே செல்வதே தோணிகளுக்கு நல்லது
- பெஞ்சமின் ஃபிராங்கிளின் -

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 19-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் 05

# நிர்க்கதி நிலையில் தமிழ் அகதிகள்

இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய தமிழ் அகதிகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் தேவையான நிவாரண உதவிகளை வழங்காது நிர்க்கதியாக விட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இலங்கை திரும்பிய முதல் தொகுதி அகதிகளில் ஒருவர் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில்அரசாங்கம் சில கிலோ பருப்பையும் 500 ரூபாவையும் தவிர வேறு எதுவித நிவாரணமும் வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளதோடு தமக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படவில்லை எனவும் தமது முன்னைய வீடு இருந்த இடமே தெரியவில்லை எனவும் முஸ்லிம் காடையர்களால் தாம் தாக்கப் படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையானது வலுக்கட்டாயமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என முன்னரே பல மனித உரிமை நிறுவனங்களினாலும் மனிதநேய நிறுவனங்களினாலும் கண்டனம் செய்யப்பட்டன. ஆனால் இந்தியாவும் சிறிலங்காவும் கருத்திற் கொள்ளவில்லை. எவ்வாறெனினும் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பி விட வேண்டும் என தமிழக அரசு தீவிரமாக இருந்தது. இதனால் சர்வதேச சட்டங்கள் எதையும் கடைப் பிடிக்க அது தயாராக இருக்கவில்லை.

இதேவேளை உலக நாடுகளிடம் இருந்து பெரும் உதவியைப் பெறுவதற்காக முயற்சித்துக் கொண்டு இருந்த சிறிலங்கா அரசாங்கம் அகதிகளின் ஒரு தொகுதியைத் திருப்பி அழைத்து விட்டால் புனர் வாழ்வு. புனர் நிர்மாணம் என்ற ரீதியிலும் நாடு வழமைக்குத் திரும்பிவிட்டது எனக்கூறியும் பெரும் தொகுதி நிதியைப்பெறலாம் எனவும் திட்டமிட்டது இதன் காரணமாக அகதிகள் இலங்கை திரும்பும் விடயத்தை அகதிகளுக்காக ஐ நா உயர் ஸ்தானிகராலயத்திடமும் கொண்டு சென்று பிரச்சினையைச் சிக்கலாக்க விரும்பாமல் தமது எண்ணத்தின்படியே செயற் பட்டது.

இதற்கு பெரும் உதவியாக இந்தியாவின் செயற்பாடும் அமைந்தது. நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலும் மக்களின் அறியாமையும் பயன்படுத்தி அவர்களை நாடுகடத்தும் முயற்சியில் தமிழகஅரசாங்கம்ஈடுபட்டது. சிறிலங்காவிற்கு நிதி உதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு பாரிஸில் கூட்டப்படுவதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாக தலைவர் பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் ராஜீவ் காந்தியின் கொலையுடன் சம்பந்தப்படுத்தி நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது.

# "சில கிலோ பருப்பும் 500 ரூபாவுமே எமக்குக் கிடைத்த நிவாரணம்"

## இந்தியாவில் இருந்து திரும்பிய அகதியின் அவலம்

(லண்டன்)

சில கிலோக்கள் பருப்பும், 500 ரூபாவும் மட்டும் தான் தனக்கு இதுவரை வழங்கப் பட்டதாக இரண்டு மாதங்களுக்கு முன்பு தமிழ்நாட்டிலிருந்து திருக்கோணமலை திரும்பிய அகதி ஒருவர் கூறியதாக பி. பி ஸி செய்தியாளர்கிறிஸ்தோபர் மொறிஸ் தெரிவிக்கிறார்.

தமிழ்நாட்டிலிருந்து முதல் முதலாகத் திரும்பி வந்த அகதிகள் தொகுதியில் ஒருவரை கிறிஸ்தோபர் மொறிஸ் நிலாவெளிக் கடற்கரையில் பேட்டி கண்டார். அகதி பெயரை வெளியிட விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் ஒரு மீனவர்.

''இந்தியாவிலிருந்து இந்த அரசு உதவி செய்யுமென்று வந்தோம் இங்கு வந்தால்எமக்குத் தொழில்கள் எல்லாம் பெரும் கஷ்டமாக இருக்குது. சாப்பாட்டுக்குக் கூட கஷ்டமாக இருக்கு. அரசாங்கம் மேலிடம் செய்தாலும் ஜி ஏ. ஏ.ஜி ஏ.மார்எங்களைக்கவனிக்கிறார்களில்லை. இப்படியான காலகட்டத்தில் எங்கள் சீவியம் போய்க் கொண்டிருக்குது என்றும்,

நங்க இலங்கைக்கு வந்தால் சந்தோஷமாக இருக்கும் என்று தான் வந்தம் அரசாங்கம் எங்களுக்கு உதவி செய்யும் பாதுகாக்கும் என்று நாங்கள் இங்கு வந்தால் எங்களுக்கும் பாதுகாப்பு இல்லை. முஸ்லிம் காடையர்கள் சிலர் அகதி முகாமில் புகுந்து எம்மை அடிக்கிறதும் அட்டகாசம் பண்ணுவதாகவும் உள்ளது.

இந்தியாவுக்குப்போகபோட்டுகள் வசதிகள் இருந்தால் இப்பவும் இந்தியாவுக்குப் போகத் தான் விருப்பமாக

> அண்மையில் திருமலை சென்ற பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ் தோபர் மொறிஸ் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய முதல் தொகுதி அகதிகளில் ஒருவரைப் பேட்டி கண்டார். பி.பி.ஸி. ஒலிபரப்பிய அப் பேட்டியின்முழுவிபரமும் வருமாறு:

இருக்குது.

முந்தி ஒரு நாளைக்கு ஆயிரம் வரும், இரண்டாயிரம் வரும், ஐந்தாயிரம் பத்தாயிரம் வரும் ஒண்டுமில்லாமலும் போகும் நாம் இப்போது பெரும் கஷ்டத்துல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் ஆக வேண்டிய தொழில் இல்லை. தொழில் செய்ய வேண்டிய உபகரணம் போட் இல்லை.வலையில்லை. சும்மா இரண்டு வீச்சுவலையை வைத்து முப்பது. நாற்பது குடும்பங்கள் சீவிக்க வேண்டியகாலகட்டத்தில் இருக்கிறோம். இலங்கை அரசாங்கம் போட்டுகள் வசதிகள் செய்துதரும் என்றுதான் வந்தோம். இலங்கை அரசாங்கம் ஒன்றும் செய்து தரவில்லை'' என்றும் அந்தப்பேட்டியின்போது நாடு திரும்பிய மீனவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இப்போது என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? அரசுக்கு நீங்கள் விடுக்கும் வேண்டுகோள் என்ன என பி. பி. ஸி செய்தியாளர் கேட்டதற்கு அரசாங்கத்திடம் சொல்ல வேண்டியது, பெரும் கஷ்டம் தொழில் செய்யவசதியில்லை. றேசன்கள் கஷ்டம்; இப்பஇந்தியாவிலிருந்து வந்து இரண்டு மாசம் ஆச்சு. ஒரு றேசன் தான் தந்துள்ளார்கள். ஒரு றேசனில் நாங்கள் எப்படிச் சீவிக்கிறது? இதை நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று பதிலளித்தார்.

திருக்கோணமலையிலிருந்து இந்தியா சென்று மீண்டும் திருக்கோணமலை திரும்பிய தமிழ் அகதிகள் தாங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று பார்த்த போது வீடுகள் இருந்த இடம் தெரியவே இல்லை.

இதற்கிடையில் ஐ நா. அகதிகள் பாதுகாப்புக்குழு ஒன்று சென்ற வாரம் ஒப்புக்கு வடக்கு, கிழக்கு பகுதிக்குச் சென்று பார்வையிட்டது. நிலைமையை அவர்கள் ஜெனிவாவுக்கு இன்னும் ஒரு சில நாள்களில் தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கை நிலவுகிறது என்றும் கிறிஸ்தோபர் மொறிஸ் தெரிவிக்கிறார்.

### அமெரிக்க இராணுவ தொழில்நுட்பம்

# மூன்றாம்உலகிற்குவிற்பனை டெல்அவிவில் விசாரணை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் இராணுவத் தொழில் நுட்பங்கள் மூன்றாம் நாடு ஒன்றுக்கு விற்கப்பட்டது தொடர்பான விசாரணைக்காக அமெரிக்க விசேட புலனாய்வுக் குழு தமது நாட்டுக்கு விஜயம் செய்வதற்கு இஸ்ரேல் இணக்கம் தெரிவித்து விட்டது என்று அமெரிக்க வெளியுறவு இலாகா அறிவித்துள்ளது.

எனினும் இவ் விசாரணைக் குழு டெல் அவிவ் புறப்படுவது பற்றிய திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

அமெரிக்க இராணுவ இரகசியங்களைப் பயன்படுத்தும் சில ஆயுத கருவிகளை சீனா உட்பட வேறு சில நாடுகளுக்கு இஸ்ரேல்விற்பனைசெய்திருப்பதாக அமெரிக்கா கருதுகிறது.

பற்றியாட் ஏவுகணை எதிர்ப்பு தொழில் நுட்பம், லேசர் இயக்கதுடன் கூடிய பீரங்கிக் குண்டுகள் உற்பத்தித் தொழில் நுட்பம் என்பவை சீனா உட்பட மூன்றாம் நாடுகளுக்கு இஸ்ரேல் விற்பனை செய்திருக்கலாம் எனக் கருதப் படுகிறது.

ஆனால் இந்தச் செய்திகள் அனைத்தையும் இஸ்ரேலியப் பிரதமர் மறுத்துள்ளார். அத்துடன் அமெரிக்காவுடனான ஒப்பந்தம் எதையும் தமது நாடு முறிக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஆயிரம் கோடி டாலர் கடன் உத்தரவாதத்திற்காகஇஸ்ரேல் கெஞ்சவோ, கையேந்தி இரங்கி நிற்கவோ மாட்டாதென இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மோசே ஆரென்ஸ் கூறியுள்ளார்.

# எட்வேட் கெனடியின் மறு திருமணம்

(வாஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஜோன் கெனடியின் சகோதரரான 60 வயது நிரம்பியதிரு. எட்வர்ட்கெனடி 38 வயது நிரம்பிய வாஷிங்டன் சட்டத்தரணியான விக்டோரியா றெஜீ என்பவரை மணக்க உள்ளார்.

எட்வர்ட் கெனடி முன்னர் விவாகம்புரிந்து 1982இல்விவாகரத்துப் பெற்றவர். இரண்டு புதல்வர்கள் உள்ளனர். இது இரண்டாவது திருமணமாகும். அதேபோல் றெஜீயும் 1990இல் விவாகரத்துப் பெற்றவர் இப்பெண்ணுக்கும் ஒருபுதல்வனும் ஒரு புதல்வியும் உள்ளனர்.

# ஈராக்கை வற்புறுத்த

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

# கிளிநொச்சிக்கு மின்சாரம்; திருத்தவேலை ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மின்விநியோகத்தை ஏற்படுத்துவதற்காக மின் விநியோகப் பாதைகளில் திருத்த வேலைகளைப் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வவுனியாவில் இருந்து இம்மாவட்டத்திற்கு வரும் மின்விநியோகப் பாதையின் ஒரு பகுதி இராணுவநடமாட்டம் உள்ள பகுதிகளில் காணப்படுவதால் இதுவரை இப்பகுதிகளில் திருத்த வேலை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. தற்பொழுது சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளது உதவியுடன் மேற்படி பகுதிகளில் திருத்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இத்திருத்த வேலைகள் பூரணமாக்கப் பட்டதும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான மின்சார விநியோகம் ஏற்படுத்தப்படும் எனத்தெரிய வருகிறது. (க)

### அன்னை பூபதி நினைவாக

# சுற்றாடல், சுகாதாரம் பேணும் நடவடிக்கை

அன்னை பூபதி நினைவாக இன்றுமுதல் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றாடல் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பகுதிக்குள் உள்ள வீடுகள், அலுவலகங்கள், வீதியோரங்கள், வவுகள் ஆகிய வற்றில் காணப்படும் குப்பைகளையும் கழிவுகளையும், பற்றைக் காடுகளையும் எதிர் வரும் 25 ஆம் திகதிக்கு முன் அழித்து உதவுமாறு பொது மக்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு அழிக்கமுடியாத குப்பைகள், கழிவுகள் ஆகியவற்றை பொதுமக்கள் வீதியோரங்களில் குவித்துவைத்தல் வேண்டும். இவற்றை இருபத்தாறாம் திகதிமுதல் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சூழல் சுகாதாரம் பேணும் விடயத்தில் ஒத்துழைக்கும்படி விடுதலைபுலிகள் அரசியல்பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுடன் சம்பந்தப்படுத்தி நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது.

இந்தியாவிலும் - சிறிலங்காவின் இக் கூட்டு நடவடிக்கையால் அவர்கள் எதிர்பார்த்த மாதிரியே உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து போதிய நிதி கிடைத்தது ஏன், சற்று அதிகமாகக் கிடைத்தது என்றே சொல்லலாம். ஆனால் வழமை போல் நிதி உதவி கிடைத்ததும் சிறிலங்கா தமது போக்கை மாற்றியது. தமிழர்களின் பெயரால் வாங்கிய நிதிகள் சிங்களவருக்குப் பயன்படுத்தப்பட்டது.

சிறிலங்காவிற்கு அதிகரித்த நிதி உதவியை வழங்க வேண்டாம் என பாரிஸில் பெப்ரவரி மாதம், உதவி வழங்கிய நாடுகளின் மாநாடு நடைபெற்றபோது உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் பலவற்றால் கோரப்பட்டது. இந்நிதி உதவி போருக்கும் சிங்களவருக்கும் மட்டுமே பயன்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது ஆனால் உதவி வழங்கும் நாடுகள் இதைக் கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை.

இதேவேளை, நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட சிறிலங்கா அரசாங்கமும், தேவை முடிந்ததும் அகதிகள் விவகாரத்தில் வழமைபோல் அசமந்தப் போக்கைக் காட்டத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் இருந்து வரும் அகதிகளை உற்சாகத்துடன் வரவேற்கவில்லை என்பதோடு, வழங்கிய வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவும் இல்லை. அகதிகளுக்கு நிவாரணம், தொழில் வாய்ப்பு, பாதுகாப்பு என்பனவற்றை வழங்குவதாக உறுதியளித்த போதும் எவற்றையும் வழங்கத் தவறிவிட்டது. அதேவேளை, புனர்வாழ்வு என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்களைக் கிழக்கிலும் வடக்கிலும் நிறுவி வருகின்றது.

அத்தோடு புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு பணம் இல்லை என இலங்கை திரும்பிய அகதிகளைப் பராமரிக்குமாறு அகதிகளுக்கான ஐ. நா உயர்ஸ்தானிகராலயத்திடம் சிறிலங்கா அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. சிறிலங்கா அரசாங்கத்தின் இந் நடவடிக்கையானது தமிழரையும் ஏமாற்றி உலகையும் ஏமாற்றும் நடவடிக்கையாகும். சிறிலங்காவிற்கு உதவும் நாடுகள் புரிந்து கொள்ள முடியாததொன்றல்ல இது. ஆனால் சுட்டிக்காட்டுவது எமது கடமை.

### சென்ரல் - சென் ஜோன்ஸ்

## கிரிக்கட் நாளை ஆரம்பம்

சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான 88வது மாபெரும் கிரிக்கட் போட்டிகள் நாளை வெள்ளியன்றும் நாளை மறுதினம் சனியன்றும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. யாழ். மத்திய கல்லூரி அணிக்கு செல்வன் கே. பிரபாகரனும், சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு செல்வன் எம். மகாலிங்கமும் தலைமையேற்றுள்ளனர்.

## ஈராக்கை வற்புறுத்த பல வழிகள் உள்ளன - புஷ்

(வாஷிங்டன்)

பேரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை அழிக்குமாறு ஈராக்கை வற்புறுத்த எல்லாவிதமான வழிகளும் இருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் தெரிவித்தார். அமெரிக்க அதிபருக்கான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் அவர் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் மேலும் பாரசீக வளைகுடாவில் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலின் நடமாட்டம் பாக்தாத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் அறிகுறி என்று கருதப்படத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

## சோவியத் யூனியனை மீளமைக்க முயற்சி

(மாஸ்கோ)

முன்னைய சோவியத் யூனியன் மீண்டும் ஏற்படுத்தப்படவேண்டுமென கோரி நேற்று முன்தினம் மத்திய மாஸ்கோவில் மிகப் பெரிய பேரணி ஒன்று நடைபெற்றது.

இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்ட முன்னாள் கம்யூனிஸ்ட்களும் தீவிர ரஷ்ய தேசியவாதிகளும் அதிபர் பொரிஸ்யெல்சினை கண்டித்து ஊர்வலம் நடத்தினர்.

அரசின் பொறுப்பை ஏற்குமாறும் இராணுவ ஜெனரல்களிடம் அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டனர்.

முன்னைய சோவியத் பாராளுமன்றமான மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸைச் சேர்ந்த இருநூறு அடிப்படைவாத உறுப்பினர்கள் அந்த அமைப்பை புதுப்பிக்கச் செய்யும் வகையில் மாஸ்கோவுக்கு வெளியில் கூட்டம் நடாத்தினார்கள்.

### ஆர்ஜென்ரீனாவில்

## இஸ்ரேலிய தூதரகம் குண்டு வெடித்துச் சேதம்

(ஆஜெரீனா)

ஆர்ஜென்ரீனாவின் தலைநகரில் நேற்று சக்திவாய்ந்த குண்டுஒன்றுவெடித்ததில் இஸ்ரேலிய தூதரகம் இடிந்து விழுந்தது.

இதில் குறைந்தது பத்துச் சடலங்கள் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. குறைந்தது 100 பேரளவில் காயங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

குடியிருப்பு பகுதியில் ஐந்து மாடிக்கட்டிடமான இந்த இஸ்ரேலிய தூதரகத்தில் நான்குமாடிகள் அப்படியே இடிந்து விழுந்து விட்டன.

எந்த மாதிரியான குண்டு எதற்காக வெடித்தது என்பது பற்றி இதுவரைதெரியவில்லை

எனினும் மத அடிப்படைவாதிகள் இந்தக் குண்டை வெடிக்கச் செய்திருக்கலாம் என ஆர்ஜென்ரீனா அதிபர் கார்யோஸ் மெனிம் குற்றம் சாட்டியுள்ளார்.

## போட்டி

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வட்டுக் கோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் வித்தியாலய அதிபர் சைவப் புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட சிரேஷ்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. க. மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

போரூட் நிறுவன சிரேஷ்ட திட்டப்பணிப்பாளர் திரு. க. கணேசலிங்கம் உதவித்திட்டப் பணிப்பாளர் திருமதி ஜெயா டோனேசன், பண்டத்தரிப்புக் கோட்ட நிழல் நிர்வாக விடய இணைப்பாளர் திரு. இ. கலாநேசன், வட்டுக் கோட்டை கொத்தணி அதிபர் திரு சி. டாஸ், காரைநகர் கொத்தணி அதிபர் திரு. செ. தேவதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

★ ★ ★

யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மெய்வல்லுநர் போட்டி செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு பாடசாலைக்கு அருகாமையில் அமைந்திருக்கும் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்திற்கு பாடசாலை அதிபர் திரு. க. தங்கராஜா தலைமைவகிப்பார். பிரதமவிருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வே. வேலாயுதம் அவர்களும் சிறப்பு விருந்தினராக திரு. ஆர் அருளானந்தமும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

அழித்து உதவுமாறு பொது

வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தொண்டர் ஆசிரியருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதியில் அமைந்துள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நாளை (20 3.92) வெள்ளிக்கிழமை தொண்டர் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது

இக் கூட்டத்தில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு தொண்டர் ஆசிரிய சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

## நாடகத்துறை கருத்தரங்கு

சமகால தமிழ் நாடக அரங்கில் மேற்கின் செல்வாக்கு என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ் பல்கலைக் கழக புவியியற் கூடத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் க. சிறீகணேசன் ச. பத்மநாதன், இ. முருகையன் ந. சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலி - கிழக்கு பிரிவுக்கான இன்றைய போட்டியில் உரும்பராய் சென் மைக்கல் அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதுகின்றது.

இப்போட்டி யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் பிற்பகல் 3. 00 மணிக்கு ஆரம்பமாகும்.

## பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகளின் பதினைந்து வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது

நாளை வெள்ளிக்கிழமை 20. 03. 1992 பிற்பகல் 3. 30 மணியளவில் யா தேவரயாளி இந்துக் கல்லூரியும் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியும் மோதவுள்ளன.

அதேதினம் பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். புனித சென்றியர் கல்லூரியும் யா. விக்னேஸ்வராக கல்லூரியும் மோதவுள்ளன.

21. 03. 1992 இல் பிற்பகல் 3. 30 மணிக்கு யாழ் நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலையும் யாழ். மகாஜனக் கல்லூரியும் மோதவுள்ளன.

அத்தினம் பிறபகல் 4. 30 மணிக்கு யாழ் உரும்பராய் இந்துக் கல்லூரியும் யாழ். புனித ஜோசப் கல்லூரியும் மோதவுள்ளன.

இப் பாடசாலைகளில் வெற்றிபெறும் நான்கு பாடசாலைகளுக்குமான மோதல் 23. 03. 1992 பிற்பகல் 3 30 மணிக்கும், 4.30 மணிக்கும் நடைபெறும்.

இவற்றில் வெற்றிபெறும் இருபாடசாலைகளுக்கும் ஆன இறுதி மோதல் 25 03. 1992 அன்று நடைபெறும்

ஈழநாதம்

## யாழ். மாவட்டத்தில் போசாக்கின்மை 100 வீதம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போசாக்கின்மை நூறு சதவிகிதத்தால் அதிகரித்துள்ளது. இந்த அவல நிலையை நீக்க யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் முயற்சி எடுத்து வருகிறது.

சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளால் உருவாகிய உணவு நெருக்கடி மற்றும் போசாக்கற்ற உணவு வகைகளின் விநியோகம், பாவனை, பட்டினி நிலை ஆகிய காரணிகளால் இம் மாவட்டத்தில் வாழும் பெண்கள் சிறுவர்கள் உட்பட அனைத்து தரப்பிலும் பெரும்பாலானோர் பூரண போசாக்கின்றிய நிலையில் உள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக வெவ்வேறு மருத்துவக் குழுக்கள் மூலம் வெவ்வேறு பகுதிகளில்மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இத்தகவல் வெளியாகியிருக்கிறது.

இவ் ஆய்வு அறிக்கைகளின்படி 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இம் மாவட்டத்தில் 35 சதவீதமாக இருந்த போசாக்கின்மை தற்பொழுது 67 சதவிகிதமாக அதிகரித்துள்ளது என்பது தெரியவந்திருக்கிறது.

இதைத் தொடர்ந்து இம் மாவட்டத்தில் போசாக்கின்மையும் அதன் விளைவுகளும் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஐந்துமருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழு நியமிக்கப் பட்டிருக்கிறது. இக் குழுவினர் நேற்று முன்தினம் தமது இடைக்கால அறிக்கைகளை தயாரித்ததுடன் அது தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர். எதிர்வரும் 23 ஆம் திகதி இவ் விடயம் தொடர்பான இறுதி அறிக்கையை இவர்கள் சமர்ப்பிக்க உள்ளனர்.

இவ் அறிக்கை சிறிலங்கா அரசுக்கும் உள்ளூர், வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. இதன் மூலம் மேற்படி நிலைமையை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட இருக்கிறது. [க,பா]

## அ.தி.மு.க. ஆட்சி வந்ததற்குக் காரணம்

## தமிழன் கதைகேட்டு ஏமாந்ததே

(சென்னை)

தமிழகத்தில் மீண்டும் அ. இ. அ. தி. மு. க. ஆட்சி வந்ததற்குக் காரணம் ஜெயலலிதாவின் வீரமும் அல்ல. தியாகமும் அல்ல. கேட்பார் கதை கேட்டு தமிழன் ஏமாந்ததுதான் என இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமை சங்கத் தலைவர் ஏ எஸ், மணவைத்தம்பி கூறியுள்ளார்.

தமிழ்நாட்டுக்காகச் சிறை சென்றாரா ஜெயலலிதா? அல்லது இனமொழிப் போராட்டங்களில் கலந்து கொண்டாரா இந்த ஜெயலலிதா? இந்திய மக்கள் கல்வி அறிவு பெறவில்லை. பத்திரிகை படிப்பதில்லை. சினிமா பார்ப்பார்கள். அதன் விளைவுதான் ஜெயலலிதா முதல்வரானது. அம்மையாரின் வீரமோ தியாகமோ காரணமல்ல.

அரசியலிலும் வியாபாரிகள் வந்ததின் விளைவு தமிழ் இனத்தின் இன மொழி வியாபாரிகள் வந்துள்ளனர். அப்படி வந்த வியாபாரிகளில் மா. பொ. சிவஞான சிரோமணியாரும் ஒருவர்.

''தமிழ் ஆய்ந்த தமிழ் மகனே தமிழ் நாட்டின் முதல் வரவேண்டும்'' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். மாணக்கேடு, ம. பொ. சி. தள்ளாத வயதில் தமிழர்நலம் காண வேண்டியவர் ஜெயலலிதாவின் புகழ் பாடுகிறார். தாயே தமிழ் மாதாவே இந்த அவமானம் யாருக்கு? தமிழ்த் தியாகிகளைப் பெற்ற மண் தமிழ்நாடு. ஆனால் சில சந்தர்ப்பவாதிகளையும் பெற்றுள்ளது

மணவைத்தம்பி

அகதி முகாமிற்கு வெளியிலுள்ள

## இலங்கை தமிழரைப் பதிவு செய்ய கோரிக்கை

தமிழ் நாட்டில் அகதிமுகாம்களுக்கு வெளியே வசிக்கும் இலங்கை தமிழர்களில் தாயகம் திரும்ப விரும்புவோர் அருகாமையில் உள்ளமாவட்ட ஆட்சிதலைவர்அலுவலகத்தில் இம்மாதம்27ஆம்திகதிக்குமுன்னர் பதிவு செய்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த அறிவித்தலை தமிழ்நாடு மாநில தலைமைச் செயலாளர் விடுத்துள்ளார். முகாம்களில் தங்கியுள்ள அனைத்து அகதிகளையும் திருப்பிஅழைத்துக் கொள்ள சிறிலங்கா அரசு விரும்புகிறது என்றும் அவர்களை திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகள்யாவும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

முகாம்களுக்கு வெளியேயிருக்கும் இலங்கை தமிழர்களின் விருப்பத்தை அறிந்துகொண்டு அவர்களையும் திருப்பி அனுப்ப ஏற்பாடுகள் செய்ய தமிழக அரசாங்கம் எண்ணியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சேலம் மகாநாட்டில் புலிகள் ஆதரவுக் குரல்

(சென்னை)

சேலத்தில் நடைபெற்ற ஒரு கட்சியின் மாநாட்டின்போதும் ஊர்வலத்தின் போதும் விடுதலைப் புலிகளுக்கும், தலைவர் பிரபாகரனுக்கும் ஆதரவானகோஷங்கள் எழுப்பப்பட்டதுடன், முதலமைச்சரையும், ராஜீவ்காந்தியையும் இழிவுபடுத்தும் கோஷங்களும் எழுப்பப்பட்டதாக தமிழக சட்டப் பேரவையில் பேசிய எதிர்க் கட்சித் தலைவரான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் செங்கை எம். ஜி. ஆர். மாவட்டத்தில் சிறை அதிகாரி ஒருவர் விடுதலைப்புலிகளுக்குஆதரவாக செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## இடையூறு ஏற்படுத்தாதீர் காவல்துறை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இன்றைய போராட்டச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மாணவர்கள் நடந்துகொள்ளவேண்டுமென தமிழீழகாவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பாடசாலைகளிடையேநடைபெற்றுவரும் கிறிக்கட் விளையாட்டுப் போட்டியைத்தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் சட்டம் ஒழுங்கை மீறி நடந்துகொள்வதாகக் கிடைத்த புகாரைத் தொடர்ந்தே அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். இதில் குறிப்பிட்ட பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலைகளின் கொடிகளை ஏந்திய வண்ணம் பிரதான வீதிகளில் செல்லும்போது எந்தவொரு பொதுமகனுக்கும் இடையூறுகள், பிரச்சினைகள், மனக்கஷ்டங்கள் ஏற்படாதவாறு நடந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

## வடக்கு, கிழக்கு நிதியில் அனு.புர வீதி புனரமைப்பு

வடக்கு, கிழக்கு வீதி அபிவிருத்திக்கு வெளிநாடுகள் வழங்கிய உதவிகள் வவுனியா, அனுராதபுரம் வீதிகளை திருத்தப் பயன்பட்டு வருகிறது.

வடக்கு, கிழக்கிலுள்ள வீதிகள் மோசமான நிலையை அடைந்துள்ளதெனவும் அவற்றை திருத்த நிதியுதவி வழங்குமாறும் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்து ஆசிய அபிவிருத்தி வங்கி 08 கோடி ரூபாவையும், ஜப்பான் அரசாங்கம் தேவையான தாரையும் வழங்கியிருந்தது. இந்த உதவிகள் கடந்த மாத இறுதியில் சிறிலங்கா அரசாங்கத்திடம் வழங்கப்பட்டன.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இந்த உதவிகளை மோசமான நிலையை அடைந்திருக்கும் வடக்கு, கிழக்கு வீதிகளுக்கு பயன்படுத்தாது சிங்களப் பகுதியிலுள்ள வீதிகளை செப்பனிடப் பயன்படுத்தி வருகிறது.

## இத்தாலிக்குள் புக முயன்ற 10 சிங்களவர் கைது

சட்டவிரோதமாக வியன்னாவுக்கும், இத்தாலிக்கும் உள்ளே புகமுயன்ற பத்துச் சிங்கள வாலிபர்கள் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பத்து இளைஞர்களும் மேற்கு மாகாணத்தைச் சேர்ந்த சிங்களவராவர். வியன்னா ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய இடங்களில் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் இவர்கள் சட்டவிரோதமான நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் எனவும் தெரியவருகின்றது.

கடந்த சில காலங்களில் ஐரோப்பிய நகரங்களில் இலங்கையர் கைதுசெய்யப்படுவது அதிகரித்து வருவதாகவும், நூற்றுக்கு மேற்பட்டோர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

தென்னாபிரிக்காவில்

## கறுப்பருக்கு வாக்குரிமை வெள்ளையர் ஆதரவு

(கேப்டவுன்)

தென் ஆபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டுமா என்று வெள்ளையர்களே தீர்மானிக்கும் கருத்துக்கணிப்புத் தேர்தல் ஜனாதிபதி டி கிளார்க்கிற்கு நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளன.

மொத்தம் 15 வட்டாரங்களில் 13 வட்டாரங்களின் முடிவுகளின்படி டி கிளார்க்கின் சீர்திருத்தத்திற்கு ஆதரவாகவேமக்கள் வாக்களித்துள்ளனர். பொதுவாக 67 விகிதத்திற்கும் சற்று அதிகமான மக்கள் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள் என்று தேர்தல் கணிப்புகள் கூறுகின்றன.

தென் ஆபிரிக்கக் கன்சர் வேட்டிக் கட்சி தனது கருத்து தோல்வி கண்டுள்ளது என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறது. இதேவேளை, நிறவெறிகளைய மக்கள் வாக்களித்தால் தாம் ஆயுதப்போர் ஒன்றை நடத்தப்போவதாக வெள்ளையின நிறவெறி அமைப்புகள் அறிவித்துள்ளன

## விசர்நாய்க் கடிக்கு பல்கலை மாணவி மரணம்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய்க் கடிக்கு இலக்கான யாழ். பல்கலைக்கழக மாணவி ஒருவர் நேற்று பரிதாபகரமான முறையில் மரணமடைந்தார்.

தெல்லிப்பளையைச் சேர்ந்த எஸ். தர்மவாணி (22 வயது) என்ற மாணவியே இவ்வாறு மரணமடைந்தவராவார். கடந்த இருபத்திரெண்டு நாட்களுக்கு முன் இவரை நாய் கடித்தது. இவர் சிகிச்சைக்காக தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார், பின் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் நேற்று அங்கு மரணமானார். (ச)

## வேறுபாடுகளை மறந்து ஒத்துழைக்க கோரிக்கை

- பஞ்சாப் முதல்வர்

(டில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் கோரிக்கைகளை நிறைவேற்றி அனைத்து அரசியல் கட்சிகளும் வேறுபாடுகளை மறந்து அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று மாநில முதலமைச்சர் திரு. பியான் சிங் கேட்டுக் கொண்டுள்ளார்.

அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றில் பேசிய பியான் சிங்,

இம் மாநிலத்தில் அடுத்...

...மல் தேசிய வாழ்வில் இணையுமாறும் தவறான வழியில் திருப்பி விடப்பட்ட இளைஞர்களுக்கு அனைத்துக் கட்சி கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## கொழும்பில் நட்வார்சிங்

(கொழும்பு)

முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் கே. நட்வார்சிங்கும், அவரது பாரியா...

## உலக கிண்ண கிரிக்கட் சிம்பாவேயின் முதல்வெற்றி

(லண்டன்)

...காரர்களையும் இழந்து 127

## செஞ்சிலுவை உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை

ஆசிய அபிவிருத்தி வங்கி 08 கோடி ரூபாவையும், ஜப்பான்

வருகிறது.

# உலக கிண்ண கிரிக்கட் சிம்பாவேயின் முதல் வெற்றி

(லண்டன்)

இதுவரை ஏழு ஆட்டங்கள் ஆடி வெற்றி பெறாத சிம்பாவே அணி இங்கிலாந்து அணியை தோற்கடித்தது

முதலில் ஆடிய சிம்பாவே அணி அனைத்து ஆட்டக்காரர்களையும் இழந்து 136 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. ஆனால் அடுத்து ஆடிய இங்கிலாந்து அணி அதைவிட மோசமாக ஆடி அனைத்து ஆட்டக்காரர்களையும் இழந்து 127 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் சிம்பாவே அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது

இதுவரை ஏழு ஆட்டங்கள் ஆடி வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி நேற்று பாகிஸ்தானிடம் தோல்வியடைந்தது முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 166 ஓட்டங்கள் எடுக்க பாகிஸ்தான் இலகுவாக இங்கிலாந்தை வெற்றி கொண்டது.

வெஸ்ட் இண்டீசுக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் நடந்த போட்டியில் அவுஸ்ரேலியா வெற்றி பெற்றது. முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களில் 6 விக்கற் இழப்புக்கு 216 ஓட்டங்கள் எடுத்தது. வெஸ்ட் இண்டீஸ் 42 4 ஓவர்களில் அனைத்து விக்கற்றுகளையும் இழந்து 159 ஓட்டங்கள் எடுத்தது.

அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற பாகிஸ்தான் வரும் சனிக்கிழமை இங்கிலாந்தை எதிர்த்து ஆடும். ஞாயிற்றுக்கிழமை தென் ஆபிரிக்க அணி இங்கிலாந்து அணியை எதிர்த்து ஆடும்.

## அகோர

முகாம்களில் இருந்து நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலும் தொடர்ந்தும் நேற்று வரை இடம் பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இப்பகுதியில் தொடர்ந்தும் மோதல்கள் இடம் பெற்றும் வருகின்றன.

இம்மோதல்கள் கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிற்கு அண்மையில் நடைபெற்றவண்ணமுள்ளது.

இதேவேளை கொக்குத்தொடுவாய் - கொண்டைக்கேணி இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் நேற்று முன் தினம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையினால் இராணுவத்தினரின் திட்டங்கள் யாவும் குழப்பமடைந்ததாகவும், இதனால் இராணுவ நடவடிக்கை பல மணி நேரம் ஸ்தம்பிதமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 30 படை பலி

இத்தாக்குதல் தொடர்பாய் செய்தி வெளியிட்ட சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அதிகாரி ஒருவர் உட்பட இருபதியெட்டு இராணுவத்தினர் பலியானதாகத் தெரிவித்தது.

## குடிமனைகள்

கப் பட்டதை தொடர்ந்து விமானக்குண்டுவீச்சுகள் ஆரம்பிக்கப் பட்டன. அத்துடன் அப்பகுதியிலுள்ள இராணுவ முகாம்களில் இருந்து குடிமனைகளை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் மக்கள் குடியிருப்புகள் பலத்தசேதத்திற்கு உள்ளாகியுள்ளன குண்டு வெடிப்புச் சத்தங்கள் புளியங்குளம் வரை கேட்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# செஞ்சிலுவை உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்கிளையினால் அதன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உணவுப்பொருள்களை வழங்கியுள்ளது.

6 மூடை பயறு, 6 மூடை பருப்பு; மேலும் 9 மூடை மா என்ற வீதத்தில் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (75)

# இரத்ததானம் வழங்கினர்

இரத்தவங்கியில் இரத்தம் கையிருப்பில் இல்லை என்ற செய்தி கேட்டு கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவிகள் பலர் நேற்று யாழ் போதனா வைத்தியசாலை இரத்தவங்கியில் இரத்ததானம் வழங்கினர்.

இதேபோல் கடந்தவாரம் யாழ் இந்துக்கல்லூரி மாணவர்களும் இரத்ததானம் செய்துள்ளனர்.

இருப்பினும் மேலும் இரத்தம் அவசரம் தேவைப்படுவதால் இரத்தவங்கி பொதுமக்களின் உதவியை நாடிநிற்கின்றது. உடன் விரைந்து இரத்தம் வழங்கி உதவுமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளன. (ச

## மீனவர்

இத் தாக்குதலில் தலையில் காயமடைந்த குருநகரைச் சேர்ந்தபொன்னுத்துரை செல்லக்குமார் [வயது22] நேற்றுக் காலை மற்றைய தொழிலாளர்களுடன் கரை வந்து சேர்ந்தார்.

அதேவேளை - வேறு பல தொழில் வள்ளங்களில் வலைகள், பாய்மரம் சுக்கான் போன்ற பொருள்கள் கடலில் வீசப்பட்டதுடன் தொழிலாளர்களையும் வள்ளங்களை விட்டு கடலில் குதிக்குமாறு கடற்படையினர் வற்புறுத்தினரென்றும் மீனவர்கள் தெரிவித்தனர். [21]

அமைந்துள்ளன.

மொத்தம் 15 வட்டாரங்களில் 13 வட்டாரங்களின் முடிவுகளின்படி டி கிளார்க்கின் சீர்திருத்தத்திற்கு ஆதரவாகவேமக்கள் வாக்களித்துள்தனர். பொதுவாக 67 விகிபதை ஒத்துக் கொண்டிருக்கிறது. இதேவேளை, நிறவெறிகளைய மக்கள் வாக்களித்தால் தாம் ஆயுதப்போர் ஒன்றை நடத்தப்போவதாக வெள்ளையின நிறவெறி அமைப்புகள் அறிவித்துள்ளன

# வரட்சி நிவாரணமாக 1கோடி 50லட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

தென்னிலங்கையில் மழையில்லாமல் நிலவும் வறட்சிகாரணமாகப்பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 1 கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கப்படவிருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் வாரமொன்றுக்கு 315 ரூபா பெறுமதியுள்ள உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்படும்.

புத்தளம், குருநாகல், பொலநறுவ, பதுளை, அனுராதபுரம், மாத்தறை, ஹெம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று சமூக சேவைகள் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளில் 3000க்கும் அதிகமான குடும்பங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

## ஐ. நா.

ஏழு பேரைக் கைது செய்தனர் என்பது தெரிந்ததே.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் அண்மையில் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டவரும் ஒருவர் எனத் தெரியவருகிறது.

இச்சம்பவம் நடைபெற்ற தினத்திலேயே ஜெனிவாவிலிருந்து இலங்கை வந்திருந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் குழுவினர் இம்முகாமில் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழுவினர் இந்தியாவிலிருந்து இங்கு அழைத்து வரப்பட்ட அகதிகளை மீளக் குடியமர்த்தல், நிவாரணம், புனர்வாழ்வு ஆகிய நடவடிக்கைகளையும் அகதிகள் நடாத்தப்படும் விதம் குறித்தும் நேரடியாக அவதானிக்கவும் இது தொடர்பான தற்போதைய நிலைமைகளை அவதானித்து அறிக்கை தயாரிக்கவுமே இங்கு வந்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு இக்குழுவினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து இரண்டாவது நாள் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (க)

# நலன் காக்கும் கழகம்

(மண்டைதீவு)

தீவக இடம்பெயர்ந்த மக்களால் நேற்று யாழ். வைத்தீஸ்வர மகாவித்தியாலயத்தில் ''தீவக இடம்பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகம்'' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன் தலைவராகவ ஐயாத்துரையும், உபதலைவராக பூராசாவும், செயலாளராக புங்குடுதீவு ப.நோ. கூ.சங்கஊழியர் குணசீலனும், பொருளாளராக ஆசிரியர் சு. கலாதரனும், 21 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன் நிர்வாகக் குழுவே தேவையான தீர்மானங்களை நிறைவேற்றும். நிர்வாகக் குழுக்கூட்டம் வரும் 21-03-92 சனிக்கிழமை புங்குடுதீவு ப நோ. கூ. சங்கத் தற்காலிக அலுவலகத்தில் இடம்பெறும் என்று கழக நிர்வாகத்துடன் நெருங்கியவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (88)

வேண்டும் என்று மாநில முதலமைச்சர் திரு. பியான் சிங் கேட்டுக் கொண்டுள்ளார்.

அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றில் பேசிய பியான் சிங்,

இம் மாநிலத்தில் அடுத்தடுத்து வரும் வன்செயல்களினை மக்களின் ஒத்துழைப்புடன் ஒடுக்குவதற்கு தாம் உறுதி கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நாட்டில் உள்ளும் வெளியிலும் இருந்து இயங்கும் பிளவு சக்திகளுக்கு பலியாகி விடா

# கொழும்பில் நட்வார்சிங்

(கொழும்பு)

முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் கே. நட்வார்சிங்கும், அவரது பாரியாரும் கொழும்புக்கு வந்துள்ளனர். தற்போது கொழும்பில் தங்கி நிற்கும் இவர்களின் விஜயத்திற்கான நோக்கம் என்ன என்பதோ, இலங்கையில் அவர்கள்கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் குறித்தோ தெளிவாகத் தெரியவில்லை.

# அழகியற் கல்வியோடு ஆங்கில இலக்கியம் கற்கலாம்

க. பொ. த (சா/த) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தை அழகியற் கல்வியோடு விருப்பத்துக்குரிய பாடமாக எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரின் சுற்று நிருபத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

க. பொ. த (சா/த) பரீட்சையில் ஆங்கில இலக்கிய பாடத்தை விருப்பத்துக்குரிய பாடமாக இவ்வருடத்திலிருந்து மாணவர்கள் தோற்றுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்று பரீட்சை ஆணையாளரும் அறிவித்துள்ளார்.

ஆங்கில இலக்கிய கற்கைநெறிக்கான பாடப் புத்தகங்கள் வெளியீட்டுத் திணைக்களத்தில்பெற்றுகொள்ளலாம்

## முதியோர் தொகை

பராமரிப்பதற்கு கொள்கையொன்றை வகுத்துக்கொள்ளல் அவசியம். இவர்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகளை காண்பதற் குழுஒன்று நியமிக்கப்பட உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## முத்துத்தம்பி செல்வநாயகம்

(ஓய்வு பெற்ற லிகிதர்)

மானிப்பாய் லோட்டன் வீதியைச் சேர்ந்த முத்துத்தம்பி செல்வநாயகம் அவர்கள் 18-03-92 அன்று காலமானார். இவர் அற்புதமணியின் அன்புக் கணவரும், கணேசதாசன், செல்வதாசன் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும். சிவசுந்தரி, ஜெயந்தினியின் அன்பு மாமனாரும், சுதர்ஷனி, பிரியதர்ஷனி, பகிரதன் சாமினி, றொஷானி ஆகியோரின் அருமைப் பேரனாருமாவார் அன்னாரது இறுதிக்கிரியை 19-03-92 (இன்று) பி.ப.3 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

தகவல்
செ. செல்வதாசன் (மகன்)

(சி/4071)